1970 செப்டம்பர் 5]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப காலத்தில், இந்தத் திட்டத்தைப் படிப்படியாக அமல்படுத்துவதற்காகக் கட்டடங்கள் கட்ட ஆரம்பிக்கப்பட்டன. தேசிய நெருக்கடியின்போது இத்திட்டம் நிறுத்தப்பட்டு, பிறகு சில களில் வீடுகள் கட்டப்பட்டன. 1970–71-ல் இதிலுள்ள சில விதிகளைத் தளர்த்தி வீடுகள் கட்ட முயற்சி எடுத்துக்கொள்ளப் பட்டது. இந்த ஆண்டில் 168 வீடுகளைக் கட்ட திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் படிப்படியாக இத்திட்டம் அமலாக்கப் படும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, கிராம சேவக்குகளுக்காக வேண்டி இப்போது கட்டப்பட்டிருக்கிற வீடு களிலே எவ்வளவு பேர்கள் குடியிருக்கிறார்கள்? குறைந்த பட்சம் 25 சதவீதம் பேர்கள் இந்த வீடுகள் குடியிருப்பதற்கு லாயக்கு இல்லாத அளவுக்கு இருக்கின்றன என்று சொல்வது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அமைச்சர் அவர்கள் உடனடியாகப் பார்வையிட்டு, அதற்கான காரணம் என்ன என்பதைக் கண்டுபிடிக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, கட்டப் பட்ட வீடுகளில் எல்லாம் குடியிருக்கிறார்கள். எத்தனை வீடுகளில் குடித்தனம் இல்லை, எவ்வளவு வீடுகள் தகுதியற்ற நிலையில் இருக் கின்றன என்ற விபரம் தற்போது என்னிடத்தில் இல்லை.

கதர் துறை பணியாளர்கள் சங்கம்

* 254 வினா—திரு. நா. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக கதர் கிராமத் தொழில் வாரியத்திலுள்ள கதர்த் துறைப் பணியாளர்கள் சங்கம் ஒன்று பதிவு செய்யப்பட்டிருக்கிறதா?

(இ) ஆம் எனில், அது எவ்வாறு செயல்படுகின்றது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) வாரிய ஊழியர்களின் பெரும்பாலான குறைகள் முறைப் படி நீக்கப்பட்டுள்ளன, எனவே ஊழியர்கள் சங்கத்தில் அதிகம் ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை.

North Arcot District Co-operative Supply and Marketing Society

* 255 Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether some irregularities were detected in the matter of distribution of chemical fertilizers by the Secretary of the North Arcot District Co-operative Supply and Marketing Society Limited, in the year 1969;

(*b*) whether the irregularities were reported by the President of the Society to the District Collector, Registrar of Co-operative Societies and other authorities; and

(*c*) if so, what action has been taken against the Secretary?